# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு

## 2014/2015 (August - 2020)

## EDS – 4143 கல்வித்திட்மிடலும் அபிவிருத்தியும்

## (Educational Planning and Development)

நேரம் 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

---

### பகுதி – I

1. "காலத்திற்கு காலம் சமூகத்தேவை, சமூகச்சூழல் என்பவற்றுக்கு அமைய கல்வித்திட்டமிடல் பற்றிய வரைவிலக்கணங்களும் மாற்றமடையக்கூடும்"

அ) கல்வித் திட்டடமிடல் தொடர்பான வரைவிலக்கணங்களிலிருந்து கல்வித்திட்டமிடல் என்றால் என்பது பற்றி தெளிவு படுத்துக? (4புள்ளிகள்)

ஆ) கல்வித் திட்டமிடல் என்பதை வகைப்படுத்தி அதில் நுண்பாகத்திட்டமிடலின் முக்கியத்துவம் பற்றி சுருக்காமாக விளக்குக? (5புள்ளிகள்)

இ) கல்வித்திட்டமிடல் தொடர்பாக முன்வைக்கப்படும் விமர்சனங்களை பற்றி மதிப்பிடுக? (5புள்ளிகள்)

2. "பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான முடிவுகளை எடுக்கும் அதிகாரங்களை பாடசாலை மட்டத்தில் கையளிப்பதோடு பாடசாலை பங்குதாரர்களை பாடசாலையுடன் ஒன்றினைக்கும் செயற்பாடே பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டமாகும்"

அ)பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்களை தெளிவு படுத்துக? (4புள்ளிகள்)

ஆ)உலகளாவிய ரீதியில் அதிகாரம் கீழ் மட்டங்களிற்கு பகிர்தளிக்கப்படுவதற்கு ஏதுவாக அமைந்த விடயங்கள் பற்றி குறிப்பிடுக? (5புள்ளிகள்)

இ)பாடசாலை மேம்பாட்டுத்திட்டத்திற்கான பாடசாலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கமைப்பினை குறிப்பிட்டு பாடசாலை மேம்பாட்டில் அதன் பங்களிப்பு பற்றி மதிப்பிடுக ? (5புள்ளிகள்)

3. “திட்டமிடல் செயன்முறையை தீர்மானிக்கும் போது ஒவ்வொரு நாடும் சமூதாயத்தில் நோக்கங்களுக்காக திட்டமிடல் செயன்முறையை தீர்மானிக்கு அதன் அணுகுமுறை முக்கியத்துவம் பெறுகின்றது.”

அ) கல்வித் திட்டடமிடல் பயன்படுத்தப்படும் அணுகுமுறைகளைக் குறிப்பிடுக? (4புள்

ஆ)மேலே பற்றி நீங்கள் குறிப்பிட்ட அணுமுறைகளில் ஏதாவது ஒரு அணுமு சுருக்காமாக விளக்குக? (5புள்

இ)கல்வி திட்டமிடலில் முதன்மையான இலக்குகளை திட்டமிடுவதில் செல்வாக் செலுத்தும் காரணிகளின் பொருத்தப்பாடு பற்றி ஆராய்க? (5புள்

## பகுதி II

4. “திட்டமிடலை தயாரித்தல் என்பது ஒழுங்குமுறையிலான பல நடவடிக்கை ஒன்றுடன்ஒன்று தொடர்புடைய வகையில் வடிவமைப்பு செய்கின்ற செயன்மு கொண்டது” எனக் குறிப்பிடலாம்.

அ)கல்வித்திட்டமிடலின் செயன்முறைப் பருவங்களை ஒழுங்குமுறையில் குறி (6புள்

ஆ)மேலே குறிப்பிடப்படும் விடயங்களின் நடைமுறைகள் தொடர்பாக சுரு விளக்குக? (8புள்

இ)கல்வி அபிவிருத்தியில் பிரதேச வேறுபாட்டில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் பற்றி ஆராய்க.? (10பு

5. “செயற்றிட்ட திட்டமிடல் அபிவிருத்தியை அல்லது மாற்றத்தை ஏற்படு நோக்காக கொண்டுள்ள ஒரு செயற்பாடாக நோக்கப்படுகின்றது”

அ) செயற்றிட்டம் ஒன்றின் நோக்கங்கள் கொண்டிருக்க வேண்டிய பண் குறிப்பிடுக? (6பு

ஆ) செயற்றிட்ட செயன்முறை போது ஒன்றில் பின்பற்றப்படும் நட ஒழுங்ககள்பற்றி குறிப்பிட்டு, அவை பற்றி சுருக்கமாக விளக்குக? (8பு

இ) நீங்கள் விரும்பிய செயற்றிட்டம் ஒன்றை செயற்றிட்டத்தின் பிரதான வி உள்ளடங்குமாறு தயாரித்து முன்வைக்குக? (10பு

6. "வருடாந்த அமுலாக்கல் திட்டமானது தேசிய கல்விக் கொள்கைகளை அடையும் நோக்கில் ஐந்து வருடகால வேலைத்திட்டத்தினூடாக பாடசாலைகளில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது"

அ) வருடாந்த அமுலாக்கல் திட்டமிடல் செயற்பாடுகளிற்காக உருவாக்கப்பட்டுள்ள கொள்கைத் தலைப்புகள் பற்றி குறிப்பிடுக? (6புள்ளிகள்)

ஆ) மேலே குறிப்பிட்ட தலைப்புக்களுக்குள் உள்ளடக்க பொருத்தமானவை என நீங்கள் தீர்மானிக்கும் விடயங்களை குறிப்பிட்டு வகைப்படுத்துக? (8புள்ளிகள்)

இ) திட்டமிடலின் வெற்றியானது திட்டமிடலிலும் நடைமுறைப்படுத்தலிலும் பெருமளவில் தங்கியுள்ளது என்று கூறுவது பற்றி உங்கள் நிலையை தெளிவுபடுத்துக? (10புள்ளிகள்)

7. பின்வரும் விடயங்களிற்கு சிறு குறிப்பெழுதுக.

அ) பாடசாலை திட்டடமிடலில் கல்வி முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பின் முக்கியத்துவம்

ஆ) பாடசாலையின் நிலைமையினை அறிந்து கொள்வதற்கு பின்பற்றப்படும் வழிமுறைகள்

இ) பாடசாலை மட்டத் திட்டமிடலின் முக்கியத்துவம்

ஈ) 13வருட உத்தரவாதமளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் (4x6 =24புள்ளிகள்)

மொத்தப்புள்ளிகள் - 100 (பகுதி I - 28 , பகுதி II – 72)